திரு. த. சோனையா: தலைவரவர்களே, சில நகரங்களில் பொலி காளை மாதிரி சில மாடுகள் யாரும் கேட்பாரற்றுத் திரிகின்றன. அது எங்கு வேண்டுமானாலும் போகும். அது யாருக்கும் சொந்தமில்லை. அப்படித் திரிகின்ற மாடுகளைப் பிடித்து ஏலம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது கோயில் மாடாக இருக்கும். அதுபற்றி என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்கான தகவல் இல்லை.

கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை.

*501 வினா.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கண்ணம்பாளையம்—கலங்கல் சாலைப்பணி இன்னும் பூர்த்தியாகாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பம் வந்ததா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை, கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தின் கீழ்தான் போடப்பட்டதேயொழிய வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அல்ல. இச் சாலைப்பணி இப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு விட்டது.

(இ) இல்லை.

House-sites for Harijans in Tiruttani taluk.

* 502 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in N. N. Kandigai Colony, Tiruttani taluk.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: ஆம். ஏற்கெனவே, 9-2-1975-ந் தேதி அன்று, 45 வீடு மனையற்ற அரிசனங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

TRUTH ALONE TRIUMPHS